

Tamil Nadu Church of Christ
Preacher`s Seminor
at Pandamangalam Namakkal DT
2nd October 2014

R.N.I.No.TNTAM/2000/3629
Postal Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office on 10 th Dec. 2014

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

To

If Undelivered Kindly Return to

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 14 டிசம்பர் 2014 கனி 1





"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சலக ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" – கொலோசெயர் 3:16








# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**

**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட் அவர்களின் செய்தி
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட் அவர்களின் வேதபாடம்
கர்த்தருடைய ஊழியர்களின் செய்தி
சகோ.பால்ராஜ், சகோ.கணகராஜ், சகோ.ராஜாமணி, சகோ.சுகுமார், சகோ.ரீகன் மற்றும்
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 172

### போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடையை வசன ஆதாரத்துடன் எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும். விடை ஜனவரி இதழில்.

1. ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், எது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்?
2. நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்ன ராஜா யார்?
3. ஜனங்களெல்லாரும் இயேசுவின் உபதேசத்தைக்கேட்கும்படி அதிகாலமே எவ்விடத்திற்கு வருவார்கள்?
4. இஸ்ரவேல் எப்படிப்பட்ட திராட்சச்செடி, அது தனக்குத்தானே என்னசெய்கிறது என்கிறார்?
5. நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்ற பெண் யார்?
6. நீங்கள் தீமையை வெறுத்து, நன்மையை விரும்பி, ஒலிமுக வாசலிலே எதை நிலைப்படுத்துங்கள் என்று எந்த தீர்க்கன் சொல்லுகிறான்?
7. எந்த அப்போஸ்தலனுடைய நிழலாகிலும் பிணியாளிகளின் மேல் படும்படி அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள்?
8. எந்த தீர்க்கதரிசியை எடுத்துச் சமுத்திரத்திலே போட சமுத்திரம் தன் மும்முரத்தைவிட்டு அமர்ந்தது?
9. யார் கர்ப்பவதியானபோது மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான் என்று அவளுடனே சொல்லப்பட்டது?
10. நானோவென்றால் கர்த்தரை நோக்கிக்கொண்டு, என் இரட்சிப்பின் தேவனுக்குக் காத்திருப்பேன்; என் தேவன் என்னைக் கேட்டருளுவார் என்று எழுதும் தீர்க்கன் யார்?

### நாசரேத்
### Nazareth

- கடல் மட்டத்திலிருந்து 1150 அடி உயரமுள்ளது. இது ஒரு சிறிய கிராமமாக இருந்தது.
- நாத்தான்வேல் நாரரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா என்றான் - (யோவா.1:46)
- நாசரேத்துக்கு நற்செய்தி சொல்லும்படியாக அனுப்பப்பட்ட தேவதூதன் - (லூக்.1:26,27)
- குடிமதிப்பெழுதப்படும்படி கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்திலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேமுக்குப் யோசேப்பும் மரியாளும் போனார்கள் - (லூக்.2:4-5)
- ஆண்டவர் நாசரேத்தில் வளர்க்கப்பட்டார் - (மத்.2:23; லூக்.2:39,40; யோவா.1:45)
- நாசரேத்தில் இயேசுவானவர் ஜெப ஆலயத்தில் ஓய்வு நாளில் வசனத்தை வாசித்து இன்றைய தினம் நிறைவேறிற்று என்றார் - (லூக்.4:18-21)
- யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இங்கிருந்து சென்றார் - (மாற்.1:9)



சிறுவர் பகுதி

# தந்திரம்
## Devices

வேதப்பகுதி: மத்தேயு 4: 1–10




**ஏமாறிய ஆதாம், ஏவாள்:** தந்திரம் என்றால் சூழ்ச்சி, அல்லது ஏமாற்றுதல் என்று பொருள். பிசாசானவன் தந்திரமுள்ளவன் ஆகையால் ஆதியிலே நம் முற்பிதாக்களாகிய ஆதாமையும் ஏவாளையும் ஏமாற்றினான். “நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ? என்று ஏவாளைப்பார்த்து கேட்டான். அதற்கு ஏமாந்துபோன ஏவாள் நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும்,தோட்டத்தின் நடுவிலே இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன், நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார். அதற்கு சர்ப்பம் நீங்கள் சாகவே சாவதில்லை நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றான். இதற்கு கீழ்ப்டிந்து பறித்து புசித்து பாவத்தின்கீழ் தள்ளப்பட்டார்கள்.

**ஏமாறாத கர்த்தர்:** பிசாசு இயேசுவை நோக்கி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் அவனுக்கு பிரதியுத்தரமாக; மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். பின்பு பிசாசு அவரைத் தேவாலயத்து உப்பரிகையின்மேல் நிறுத்தி, நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும் ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான். அதற்கு இயேசு உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார். மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு அப்பாலே போ சாத்தானே உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். நீங்களும் உங்களை ஏமாற்ற வரும் பிசாசை கர்த்தருடைய வசனத்தைக் கொண்டு எதிர்த்து இயேசுவைப்போல அப்பாலே போ சாத்தானே என்று சொல்வீர்களா?

> மனப்பாட வசனம் : “சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே” (2கொரி.2:11)



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 15 டிசம்பர்-2014 கனி - 1

ஆசிரியருரை

# பரிசுத்த ஆவியானவரின் பணி
## Work of the Holyspirit



பரிசுத்த ஆவியானவரைப் பற்றி பலர் பலவிதமான கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். பரிசுத்த வேதாகமம் பரிசுத்த ஆவியானவரின் பணியைப் பற்றி என்ன சொல்லுகிறதென்று இன்றைய நாள் செய்திவேளையில் நாம் தியானிப்போம். நமது ஆண்டவர் இயேசு சொன்னார்; "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்"என்றார் (யோவா.16:7,8). ஆண்டவர் இயேசு பாவிகளாகிய நமக்காக சிலுவையில் மரித்தார். பின்பு தேவனால் உயிரோடு எழுப்பப்பட்டார். அவர் இன்றும், என்றும் உலகத்தின் பாவிகளை இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். அவர் உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களுக்குப் பின்பு பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டார். அவர் தேற்றரவாளனாகவும், பாவத்தையும், நீதியையும், இனிவரக்கூடிய நியாயத்தீர்ப்பைக்குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் என்பதாய் கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஆனால் இன்று பரிசுத்த ஆவியானவர் அந்நிய பாஷைக்கு அடையாளமாயிருக்கிறார் என்றும், பரிசுத்த ஆவியானவரைப் பெற்றவர்கள் ஆவிக்குரியவர்கள் எனறும், ஆவியினால் வழிநடத்தப்படுகிறார்கள் என்றும் சொல்லிவருகிற ஒரு கூட்டத்தைக் குறித்து கேள்விப்படுகிறோம். வேத வசனம் நம் எல்லோருக்கும் போதிப்பது என்ன?

முதலாவது பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக்குறித்து கண்டித்து உணர்த்துவார் என படிக்கிறோம். ஆதாம் முதல் பாவமானது எல்லோரையும் ஆண்டுகொண்டது. பாவம் மனிதனை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது. அன்றும் சரி இன்றும் சரி பாவத்தினால் மனிதன் சாபத்திற்கு தள்ளப்படுகிறான். இயேசுவின் நாட்களில் அநேகர் இயேசுவை விசுவாசித்தார்கள். அதேவேளையில் அவரை விசுவாசியாமல் இருந்த கூட்டமும் இருந்தது. ஆகையால் இயேசுவானவர் சொல்லும்போது; "அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும்"... கண்டித்து உணர்த்துவார் என்கிறார் (யோவா.16:9-11). பாவம், மனிதனுக்கும் தேவனுக்கும் நடுவாக பிரிவினையை உண்டாக்குகிறதல்லவா! ஆகையால் பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக்குறித்து கண்டித்து வசனத்தின் மூலமாக இன்றும் உணர்த்திக்கொண்டுவருகிறார் என்பதுவே உண்மை. இதை எல்லா நிருபங்களிலும் வாசிக்கிறோம். பாவத்தைக்குறித்து பேசாத, எழுதாத

அப்போஸ்தலர்களோ அல்லது தேவதாசர்களோ இல்லை. எல்லோருமே ஆவியானவருடைய உதவியோடு பாவத்தைக்குறித்து கண்டித்து எழுதுவதை நாம் ஒவ்வொரு நிருபங்களிலும் பார்க்கிறோம். இது பரிசுத்த ஆவியானவருடைய பணிகளில் ஒன்றாயிருக்கிறது. பாவத்தைக்குறித்து கண்டித்து உணர்த்தாத சபை, பரிசுத்த ஆவியானவரின் பணிக்கு தடைசெய்கிறது என்றே சொல்லவேண்டும். ஆண்டவர் தாம் வளர்ந்த ஊருக்கு வந்தார். அங்கு "அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டு, கிராமங்களிலே சுற்றித்திரிந்து, உபதேசம்பண்ணினார்" என்று காண்கிறோம் (மாற்.6:6). இன்றும் சொந்த ஊரில் ஒரு ஊழியனுக்கு மதிப்பில்லை. ஆகையால் கர்த்தருடைய வார்த்தையை அவர்கள் புறம்பே தள்ளுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு பரிசுத்த ஆவியானவருடைய பணி மிகவும் அவசியமாயிருக்கிறது. மேலும் நாம் படிக்கிறோம்; "கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (மத்.11:21). இப்படி அநேக பட்டணங்கள் இயேசுவின் அற்புதங்களைப் பெற்றும். அவரையும் அவருடைய வல்லமைகளைக் கண்டும் விசுவாசியாமற்போனது. இப்படிப்பட்டவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் பணி அவசியமாயிருக்கிறது. அவர் பாவத்தைக்குறித்தும் அவர்கள் தேவனுக்கு விரோதமாக செய்யக்கூடிய காரியங்களைக்குறித்தும் கண்டித்து உணர்த்துகிறார். ஏசாயா சொல்லுகிறார்; "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசா.59:2). பாவங்கள் தேவனுக்கும் மனிதனுக்கும் நடுவே பிரிவினையை கொண்டுவருகிறது. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட கர்த்தருடைய வசனமோ மனிதனை பாவத்திலிருந்து விடுவித்து அவரோடு ஒப்புரவாக்குகிறது.

இரண்டாவதாக பரிசுத்த ஆவியானவர் நீதியைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவதற்கான காரணம் என்னவென்றால்; இயேசு சொல்கிறார்; "நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும் ...கண்டித்து உணர்த்துவார் என்கிறார்" (யோவா.16:9-11). பரிசுத்த ஆவியானவர் ஆண்டவருடைய போதனையிலிருந்து நீதிக்குரிய காரியங்களை எடுத்துரைக்கிறார்; "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" என்று சொல்லுகிறார் (யோவா.16:14). பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். பிதாவானவர் இயேசுவை இவர் என் நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் ஆகையால் இவருக்குச் செவிகொடுங்கள் என்கிறார். இயேசுவானவர் நான் போய் உங்களுக்கு ஒரு தேற்றரவாளனை அனுப்புவேன் என்கிறார். பரிசுத்த ஆவியானவர் இயேசுவை மகிமைப்படுத்துகிறார் என அறிகிறோம். ஏசாயா சொல்கிறார்; "நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்" (ஏசா.11:5). ஆண்டவர் நீதியை வஸ்திரமாக தரித்தவர். ஆகையால் அவருடைய வசனத்தை பரிசுத்தஆவியானவர் எடுத்து இங்கே மகிமைப்படுத்துகிறார். நீதிக்குரிய காரியங்களை அவர் போதிப்பதின் இரகசியம். ஒவ்வொருவரும் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டு நீதிமான்களாக மாற்றப்படவேண்டும். நீதிமான்களை கர்த்தர் நேசிக்கிறார் அவர்களை இரட்சிக்கிறார். எப்படியென்றால் "நாள்தோறும், அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" என பரிசுத்த ஆவியானவரின்



தொல் பொருளாராய்ச்சியாளர்கள் இதைப் பானைகளின் துண்டுகளை ஆயிரக்கணக்கில் கண்டெடுக்கின்றனர். அவைகள் அதிகமாகவும் மலிவாகவும் கிடைக்கின்றன.

இ) இந்தப் பாத்திரங்கள் பாதுகாப்பானவைகள் அல்ல. அவைகள் எளிதாய் உடையக்கூடியவைகள்.

ஈ) அவைகளில் சாதாரணமாக விலை மதிப்புள்ள பொருட்களை வைக்க மாட்டார்கள்.

3. தேவன் அந்தவிதமான பாத்திரங்களில் அவருடைய பொக்கிஷங்களை வைத்துள்ளார். அவருடைய ஊழிங்களே அந்தப் பாத்திரங்கள்.

அ) மண் ஜாடிகளைப் போல மனிதர்கள் பெலவீனமானவர்கள். **நான் உடைந்த பாத்திரத்தைப்போலானேன் (சங்.31:12).**

ஆ) அடிக்கடி நாம் உள்ளிருக்கும் பொருளைவிட அது வைக்கப்பட்ட பாத்திரத்துக்கு மதிப்பளிக்கிறோம்.

இ) ஒரு மனிதன் எப்படிப்பட்டவர் என்பதைப் பார்த்து மக்கள் அவனைப் பின்பற்றுகிறார்கள் அல்லது எவ்வளவு நன்றாக அவன் பேசுகிறான் அவன் என்ன சொல்கிறான் என்பதை வைத்தல்ல.

ஈ) இது தேவனுடைய சுவிசேஷமாக இருக்கிறபடியால் அதை நமக்கோ அல்லது மற்றவர்களுக்கோ பொருந்தும்படி மாற்றக்கூடாது. பாடுகளை தவிர்க்கும்படி நாம் ஒத்துப்போக முடியாது.

**முடிவுரை**

1. நம்முடைய கரங்களிலே பூமியிலே மிகப்பெரிய பொக்கிஷமாகிய தேவனுடைய கிருபையுள்ள சுவிசேஷமிருக்கிறது.

2. நமக்கு உக்கிராண ஊழியம் இருக்கிறபடியால் நாம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

3. இந்தப் பொக்கிஷத்தைக் கொண்டு நாம் என்ன செய்யப்போகிறோம்? நாம் அதற்குக் கீழ்ப்படிந்து பிறருக்கும் அதைச் சொல்ல வேண்டும்.

தெரிந்து கொள்வோம்

## ஐபிராத்து நதி

- K.R.K.Ravi Asir
Associate Editor

ஐபிராத்து நதி: கிழக்கு துருக்கி தேசத்தின் டாரஸ் மலை பகுதிக்கு எதிரே இந்நதி தொடங்குகிறது. இப்பகுதி கருங்கடலுக்கு அருகாமையில் உள்ளது. இந் நதி சீரியா தேசத்தின் வழியாக தென்கிழக்கு திசையில் ஓடி தெற்கு மெசப்பொத்தோமியாவுக்கு நேராகச் சென்று டைகிரீஸ் நதியுடன் இணைந்து இப்பொழுது உள்ளபடி "ஷட் அல் அராப்" (Shatt al Arab) என்று அழைக்கப்படுகிறது. இந்நதி ஏறத்தாழ 1,675 மைல் நீளத்திற்கு ஓடுகிறது. ஐபிராத்து நதி ஆதி.2:14-ல் முதலாவதாக குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்நதி உபா.11:24 வசனத்திலும் குறிப்பிடப் பட்டிருக்கிறது.




யாத்.23:31-ம் வசனத்தில் நதி என்றும், ஆதி.15:18; உபா.1:7 ஆகிய வசனங்களில் பெரிய நதி என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நதி ஒரு சமயம் எபிரெய தேசத்தின் வடக்கு எல்லையாக இருந்து யூதாவின் இராஜாவாகிய யோயாக்கீனுடைய நாட்களில் (2இரா.24:7) பாபிலோனிய, எகிப்திய தேசங்களைப் பிரிக்கும் எல்லையாக இருந்தது (2சாமு.8:3;10:16).

ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும் ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும். பரிசுத்த ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1பேது.2:9).

ஊ) பவுல் சாத்தானுடைய வல்லமையிலிருந்து தேவனிடம் திரும்பவேண்டியிருந்தது.

ஏ) திரும்புவதன் (மனந்திரும்புவதன்) மூலம் அவர்கள் பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

1. பிரமாணத்தின் கீழ் பாவமன்னிப்பு இல்லை
2. தேவன் நம்மை மன்னிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.

எ.) புறஜாதியாருக்கு பவுல் செய்த இந்த ஊழியம் அவருக்கு மிகுந்த பாடுகளைக் கொடுத்தது.

அ) புறஜாதியார் என்ற சொல்லை பயன்படுத்தும் வரை மக்கள் பவுலின் வார்த்தைகளைக் கவனித்தனர்.

புறஜாதியார் இரட்சிக்கப்படுவது சுவிசேஷத்தின் ஒரு பகுதி என்பது யூதர்களை மிகவும் ஆத்திரமடையச் செய்தது. யூதர்களைப் போலவே புறஜாதியாரும் தேவனுடைய பார்வையில் சமமாக இருக்க முடியும். இந்த உண்மையை யூதர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஆ) புறஜாதியாரிடம் செல்வதை தவிர்த்திருந்தால் அவருக்கு வந்த அநேக உபத்திவங்களிலிருந்து தன்னைக் காத்துக்கொண்டிருக்க முடியும்.

பவுலுக்கு ஒரு உக்கிரான ஊழியம் கொடுக்கப்பட்டிருக்கிறது (கொலோ.1:25)

உக்கிராணக்காரன் என்றால் மற்றொருவருடைய சொத்துக்களை மேலாண்மை (பராமரிப்பது) செய்பவன்.

பவுல் உக்கிரணக்காரனாயிருந்தபடியால் தன்னுடைய உக்கிராண வேலையில் அவன் உண்மையுள்ளவனாயிருக்க விரும்பினான். அப்படியாக தேவன் அவனிடத்தில் எதிர்பார்த்த எதையும் உடையவனாயிருக்கும்படி அதற்காக எதையும் செய்யத் தயாராயிருந்தான். அவன் புறஜாதியாரிடம் செல்வதை நிறுத்தியிருந்தால் தன்னுடைய உக்கிராண வேலைக்கு அவன் உண்மையுள்ளவராயிருந்திருக்க முடியாது.

இ) நமக்கும் ஒரு உக்கிராண வேலை உண்டு இந்தப் பொக்கிஷத்தை நாம் மண்பாண்டங்களில் பெற்றவர்களாயிருக்கிறோம் (2கொரி.4:7).

1. ஒரு பொக்கிஷம் (புதையல்) என்றால் அது பொன் அல்லது வெள்ளியாயிருக்க வேண்டுமென்று நினைக்கிறோம். இங்கே பொக்கிஷம் என்பது ஆவிக்குரிய வெளிச்சம் (4:6) உலகம் முழுவதும் இருளினால் நிறைந்திருக்கிறது. நாம் எப்படி இந்தப் பொக்கிஷத்தை அளவிடப்போகிறோம்.

அ) அடிக்கடி இந்தப் புதையலை வஞ்சகமாகவே மனிதர்கள் அதிகம் கையாளுகின்றனர்.

ஆ) மிக அதிகமான சபைக்கு உழைப்பதென்பது முக்கியமில்லாதது என்று நினைக்கிறோம்.

இ) சபையையும் சுவிசேஷத்தையும் அடிக்கடி அதிகம் ஏதோ எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறோம்.

2. இந்தப் பொக்கிஷத்தை நாம் பூமிக்குரிய பாத்திரங்களில் அல்லது களிமண் ஜாடிகளில் கொண்டுள்ளோம்.

அ)முதல் நூற்றாண்டில் இந்த பூமிக்குரிய பாத்திரங்கள் என்பது களிமண்ணால் செய்யப்பட்ட பானைகளாகும்.

ஆ) தன்னில்தானே அவைகள் மதிப்புள்ள வைகளல்ல. பழமையான நகரங்களிலே



உதவியினால் எழுதிய பேதுரு தமது நிருபத்தில் சொல்லியிருக்கிறார் (2பேது.2:8,9). அன்பான தேவனுடைய ஜனமே, பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும் அவருடைய வசனத்தின் மூலம் கண்டிக்கிறார். என்பதை இச்செய்தியின் வாயிலாக அறிகிறோம். எதற்காக கண்டிக்கிறார்? நம்முடைய நன்மைக்காவே. நாம் இரட்சிக்கப்படவேண்டும். அவர் தேற்றரவாளன் மாத்திரமல்ல. அவர் நம்மை கண்டித்து சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும் ஆவியானவராயிருக்கிறார். ஆகையால் பரிசுத்த ஆவியானவரின் கடிந்துகொள்ளுதலுக்கு செவிகொடுத்து கர்த்தருக்குப் பிரியமானபடி வாழ பிரயாசப்படுங்கள்.

மேலும் பரிசுத்த ஆவியானவர் நியாயத்தீர்ப்பைக்குறித்தும் கண்டித்து உணர்த்துகிறார். இன்றைக்கு மனிதன் என்னதான் பிரசங்கங்களைக் கேட்டாலும் அவன் நியாயத்தீர்ப்பு ஒன்று இருக்கிறது என்பதை மறந்துவிடுகிறான். நியாயத்தீர்ப்பின் பயத்தை அவனுக்கு அவ்வப்போது நினைப்பூட்டவேண்டியிருக்கிறது. ஆகையால் ஆவியானவர் இப்பணியை செய்துகொண்டிருக்கிறார். இயேசு சொல்லும்போது; "இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார்" என்கிறார் (யோவா.16:11). நியாயத்தீர்ப்பு எல்லோருக்குமே இருக்கிறது. நான் ஒரு நீதிமான் எனக்கு நியாயத்தீர்ப்பு இருக்காது என்று ஒருவரும் சொல்லமுடியாது. பிரசங்கி சொல்லும்போது; "ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்" என்பதாக சொல்லுகிறார் (பிர.12:14). தேவனுடைய நியாயமான தீர்ப்புக்கு ஒருவரும் தப்பமுடியாது எனஅறிகிறோம். நியாயத்தீர்ப்பு கர்த்தரிடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. "கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது (ஏசா.11:3,4). கர்த்தர் தமது இஷ்டத்திற்கு நியாயத்தீர்ப்பு செய்யமாட்டார். தம்முடைய வசனத்தின்படி ஒவ்வொருவனையும் நியாயத்தீர்ப்பு செய்வார். என்னுடைய வசனமே உங்களை நியாயந்தீர்க்கும் என்று சொல்லியிருக்கிறபடி அவர் நியாயந்தீர்ப்பார். பரிசுத்த ஆவியானவர் அவருடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து பல தேவதாசர்களுடைய வாக்கியங்கள் மூலமாக எச்சரித்து, கண்டித்து உணர்த்திக்கொண்டிருக்கிறார்.

மேலும், பரிசுத்த ஆவியானவர் கர்த்தரைக்குறித்தும் நியாயத்தீர்ப்பைக்குறித்தும் பேதுருவைக் கொண்டு பேசும்போது; "அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்" (அப்.10:42,43). தீர்க்கதரிசிகளின் காலமுதலே இயேசுவைக்குறித்து பேசப்பட்டது. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறுகிறோம். அதைப்போல அவரால் நியாயந்தீர்க்கப்படப்போகிறோம்; ஆகையால் "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2கொரி.5:10). உலகத்தில் நம்மை பாவத்திலிருந்து இரட்சிக்கிற இரட்சகராக ஆண்டவர் இயேசு இருக்கிறார். நாம் மரித்து பின்பு நியாயத்தீர்ப்பின் நாளுக்கு எழுந்திருக்கும்போது நம்மை அவர் நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாக வீற்றிருப்பார். அவருடைய நியாயசனத்திற்கு முன்பாக எல்லோரும் வெளிப்படவேண்டும். அவர் தமது

கண்கண்டபடி நியாயத்தீர்ப்புசெய்யாமலும் தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும் நியாயமாய் தீர்ப்புச்செய்வார் என்று சொல்லப்பட்டபடி நியாயந்தீர்ப்பார். அவருடைய நியாயத்தீர்ப்புக்கு நீ ஆயத்தமாயிருக்கிறாயா? இதை பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு நிருபங்களிலும் தேவனுடைய ஜனங்களுக்கு எச்சரித்து புத்திசொல்லிக்கொண்டு வருகிறதை நாம் அறிகிறோம். அவர் பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் எடுத்துரைக்கிறார். எச்சரிப்படைந்து தேவனை சந்திக்க ஆயத்தப்படுங்கள்.

**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார் என்று சொல்லப்பட்டிருக்கிறதே அது எப்படி?**

ஆம், "சத்தியஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரபோகிறகாரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்று அவரைக்குறித்து ஆண்டவர் இயேசு சொல்லியிருக்கிறார் (யோவா.16:13). சகல சத்தியத்திற்குள்ளும் எப்படி நடத்துவார்? என்ற சந்தேகம் அநேகருக்கு இருக்கிறது. நாம் கண்களை மூடிக்கொண்டு ஆவியானவர் சொல்லுகிறதாவது என்று ஒரு பிரசங்கி சொன்னால் அது ஆவியானவர் சொல்லுகிறது என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. "வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்று பவுல் தீமோத்தேயுவுக்கு தெளிவாக எழுதியிருக்கிறார் (2தீமோ.3:16,17). நாம் வைத்திருக்கிற வேத புத்தகம் ஆவியானவரால் அருளப்பட்டிருக்கிறது. தேவ மனிதர்கள் தேவ ஆவியினால் அவைகளை எழுதினார்கள். ஆகையினாலே பேதுரு சொல்லும்போது; "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் என்றார்" (1பேது.4:11). ஆவியானவர் அவருடைய வசனங்களின் மூலமாக செயல்படுகிறார். வசனங்களைக் கேட்டு நாம் விசுவாசத்திற்குள்ளாக வருகிறோம். வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்" என பவுல் தெளிவு படுத்துகிறார் (எபே.1:13). பரிசுத்த ஆவியானவர் நாம் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டு மென்பதற்காக அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும், அதாவது கிறிஸ்துவின் வசனங்களுக்குள் வழிநடத்துகிறார்.

**நடப்புச் செய்திகள்**

- ➩ 'காளான்கள் போல் அரசியல் கட்சிகள் முளைக்கின்றன. கட்சிகளை பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறை அங்கீகாரம், பதிவு பெற்ற கட்சிகளுக்கு வழங்கப்படும் சலுகை விபரங்களை இந்திய தேர்தல் கமிஷன் தெரிவிக்க வேண்டும்' என மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது.
- ➩ ஸ்மார்ட்போன்களுக்கு கூகுள் நிறுவனம் உருவாக்கியுள்ள புதிய ஆபரேட்டிங் சிஸ்டமான ஆன்ட்ராய்ட்-5 லாலிபாப் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- ➩ போர் விமானத்தில் இருந்து தாக்கக்கூடிய 'நிர்பய்' ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கி வருகிறது என்று அதன் இயக்குநர் அவிநாஷ் சுந்தர் தெரிவித்துள்ளார்.
- ➩ தமிழகத்துக்கு கூடுதலாக கோதுமை வழங்கத்தயாராக உள்ளதாக மத்திய உணவு, பொது விநியோகத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் தெரிவித்துள்ளார்.
- ➩ தென்னிந்திய அளவிலான சி.பி.எஸ்.இ.இ பள்ளிகளிடையே நடைபெற்ற கராத்தே போட்டிகளில் தேனி மாவட்டம் கம்பம் பள்ளி மாணவர்கள் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர்.



3. பணம் அநேகரை இழுக்கிறது. அவர்கள் பணம் இருக்கும் வரைக்கும் அதற்காக எந்த இடத்துக்கும் செல்வார்கள்.

**I. இயேசுவிடமிருந்து பெற்றுக் கொண்ட ஊழியத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கமாயிருந்தது.** பவுலை இந்த நோக்கத்திற்காக தேவன் விசேஷமாக அழைத்திருந்தார்.

**அ) தமஸ்குவுக்குப்போகும் வழியிலே நடந்ததையும் தேவன் அவரை அழைத்ததையும் மீண்டும் எண்ணிப்பாருங்கள்.**

**ஆ) அப்போஸ்தலன் என்றால் "அனுப்பப்பட்ட ஒருவன்" அப்படியாக பவுலுக்கு எப்படிப்பட்ட வேலை ஒப்புவிக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும்(அப்.26:15-18).**

**இ) சுவிசேஷம் என்றால் "நற்செய்தியாகும்" தேவகிருபை எல்லா மனிதருக்கும் பிரசன்னமாகியிருக்கிறது (தீத்து 2:11)**

1. மனிதனை மீட்பதற்கான தேவதிட்டம் இரகசியமானது ஆனால் அது அனைவருக்கும் கிறிஸ்துவுக்குள் வெளிப்படுத்தப்பட்டது.

2. மறைவிலே சுகபோகமாக வாழ்க்கையை வாழ்கிற நாஸ்சிசம் போலல்லாமல் தேவ கிருபை மனுக்குலத்திற்கு இரட்சிப்பைக் கொண்டுவந்தார் என்ற நற்செய்தியை எல்லாரும் கேட்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கேட்பதுமட்டுமல்ல கவனிக்கவும் வேண்டும்.

3. கிறிஸ்துவின் வாழ்க்கை தேவன் மனிதனுக்கு அளித்த உச்சகட்ட கிருபையை சுருங்கச் சொல்வதாயிருக்கிறது. எல்லா மனிதரும் இந்த கிருபைக்குட்பட்டவர்களே.

4. இந்தக் கிருபையின் நோக்கம் எல்லா மனிதருக்கும் இரட்சிப்பை அருளுவதே. அது எல்லாருக்கும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மனிதனிடமிருந்து சிலவற்றை அது கேட்கிறது.

**ஈ) பவுல் அவருடைய கண்களைத் திறக்கவேண்டியதாயிருந்தது (அப்26:28).**

1. தேவசித்தத்தைப்பற்றிய அறியாமையினாலே மனிதர்களுடைய கண்கள் குருடாக்கப்பட்டிருந்தது.

2. உண்மையான காரியங்களுக்கு மனிதன் குருடாயிருக்கிறான்.

3. கிறிஸ்துவின் பெருந்தன்மைக்கு நம்முடைய கண்கள் திறக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. காணக்கூடாதவைகளைக் காணத்தக்கதாக நம்முடைய கண்கள் திறக்கப்பட்டிருக்க வேண்டும் (2கொரி.4:18). இந்த உலகில் மதிப்பைப்பற்றி விளக்கிச் சொல்வதில் பிரசங்கி புத்தகம் சிறந்த ஒன்று. சூரியனுக்குக் கீழே அனைத்தும் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறதென்று சாலமோன் சொன்னார். உண்மையான சந்தோஷம் மகிழ்ச்சி மற்றும் திருப்தி என்பது நாம் காணக்கூடாத ஆவிக்குரிய செயல்களில்தான் காணமுடியும்.

5. சபையின் மகத்துவத்தைக் காணும்படியான நம் கண்களைத் திறப்போம். அநேகருடைய சிந்தையில் சபை என்பது மதிப்பற்ற ஒன்றாக எண்ணப்படுகிறது. சபைக்காக கிறிஸ்து இரத்தம் சிந்தினார் (அப்.20:28). சபையில் எந்த மதிப்பும் இல்லையென்றால் கிறிஸ்துவின் இரத்தத்திலும் அப்படியே என்று எண்ணப்படும்.


6. வாய்ப்புகளின் மேன்மையைக் காணும்படி நம் கண் திறக்கவேண்டும். போதிப்பதற்காக வாய்ப்புகளை பவுல் எதிர்பார்த்திருக்கிறார்.

7. சிரமங்களைக் காணும்படி நம் கண்களைத் திறப்போம். அவைகள் வாய்ப்புகளாக மாற்றப்படக்கூடும் (2கொ.12:10)

**உ) நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான**

# பாடம் -10 கிருபையின் சுவிசேஷம் *- Jerry Bates*

**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**




1. இந்த சந்தர்ப்பத்திலே பவுல் எபேசுவிலுள்ள மூப்பர்களோடு தன் வாழ்நாளில் கடைசியாக பேசுகிறார்.

2. அவர்கள் மத்தியில் வாழ்ந்த போது அவர் எப்படி வாழ்ந்தார் என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார். யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் முழு சுவிசேஷத்தையும் அவர் போதித்திருந்தார்.

3. இப்போது எருசலேமுக்குச் செல்கிறார். அவருக்கு என்ன சம்பவிக்கப்போகிதென்று தெரியாது எப்படியிருப்பினும் ஆவியானவர் அவருக்கு அவர் செல்லுமிடமெல்லாம் துன்பங்களும் சிறைச்சாலைகளும் காத்திருக்கின்றன என்றார்.

**I. அவருக்கு என்ன நடக்குமென்று தெரிந்திருந்தபடியால் அநேகர் எருச லேமுக்குச் செல்ல விரும்பமாட்டார்கள்.**

**அ) ஆகிலும் இவைகளில் ஒன்றையுங் குறித்து கவலைப்படேன் என்று பவுல் சொல்லுகிறார். தனக்கு என்ன நடக்கும் என்பதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றவிடாதபடி அவைகள் ஒன்றும் அவரை பயமுறுத்தவில்லை.**

1. அவருடைய உயிர் அவருக்கு பிரதானமானதல்ல. மரணத்தை விடவும் சில காரியங்கள் முக்கியமானதாகும்.

2. கிறிஸ்து இயேசுவிலே தேவபக்தியாய் நடக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2தீமோ.3;12) என்பதும் அவருக்குத் தெரியும்.

3. ஆகையால் இக்காலத்துப் பாடுகள் நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன் (ரோம.8:18).

**ஆ) சுவிசேஷத்துக்காக துன்பப்படுவதில் பவுல் மகிழ்ச்சியடைந்தார். இப்போது நான் உங்களுக்காக பாடனுபவிக்கிறேன்.**

1. பவுலின் எதிரிகள் அவரைப் பரியாசம் பண்ணினதோடு சத்தியத்திற்கு எதிராக போராட அவருடைய சிறைத்தண்டனையை பயன்படுத்தினார்கள்.

2. பவுல் துன்பப்படுவதில் சந்தோஷப்பட்டார் இரத்த சாட்சியாக மரிப்பதில் அல்ல.

**இ) துன்பப்படுவதில் ஏன் சந்தோஷப்படவேண்டும்.**

1. பவுல் கிறிஸ்துவுக்காக துன்பப்படுகிறார். ஆதியிலிருந்த சீடர்கள் கிறிஸ்துவுக்காக அவமானத்தை அனுபவிக்க தகுதியாக எண்ணப்பட்டதற்கு சந்தோஷப்பட்டார்கள் (அப்.5:41). கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபடுவதை பேதுரு கௌரவமாக எண்ணினார்.

2. கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்காக பவுல் பாடுபட்டார் (கொலோ.1:24).

   1. முன்பு பவுல் சபையை துன்பப்படுத்தினார்.
   2. சபையிலிருந்து நான் என்ன பெற முடியும் என்ற மனப்பான்மையே இன்று அநேகருக்கு இருக்கிறது.
   3. தேவ ஊழியம் செய்வதிலிருந்து சிறைவாசம் கூட அவரை தடுக்க முடியவில்லை.

**ஈ) உங்களை சிந்திக்கச் செய்வது எது:**

1. அநேகர் துன்பமனுபவிக்க சிரமப்படுகிறன்றனர். முதல் தொல்லை வந்த உடனேயே அவர்கள் நம்பிக்கை இழந்து விடுகின்றனர்.

2. சில பிரசங்கிகள் மக்களை திருப்திப்படுத்த விரும்புகின்றனர். கூட்டத்தைக் கொண்டு வருகிற எதை வேண்டுமானாலும் பிரசங்கிப்பது.



# ஆராதனையில் என்ன சம்பந்தப்பட்டுள்ளது?

## What is Involved in Worship? *J.C.Choate*

இயேசு, ‘‘தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்’’ என்றார் (யோவா.4:24). எப்படிப்பட்ட விசேஷித்த, ஆனால் எளிமையான கூற்று இது!. தேவன் ஆவியாயிருக்கிறார், சகலவற்றையும் சிருஷ்டித்தவர், மேலும் அவர் ஆராதிக்கபட வேண்டியவர். ஆனால் அவர் ஆராதிக்கப்பட வேண்டியவரானால், மற்றும் நம்முடைய தொழுகை அவரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால், அது ஆவியோடும் உண்மையோடும் இருக்கவேண்டும். ‘‘ஆவி’’எனக் குறிப்பிடுகையில் உண்மை, மனவெழுச்சி, சம்பந்தப்படுதல், மேலும் போற்றுவதற்கான விருப்பம், மற்றும் தேவனை கனப்படுத்துவது போன்றவைகள் அதில் அடங்குகிறது. ஒருவன் என்ன செய்துகொண்டிருக்கிறான் என்பதை தன் மனதில் தொடர்ச்சியாக நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருள், அவன் ஆராதனையின் ஒவ்வொரு பகுதியிலும் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும், மேலும் தன்னுடைய மனதை மற்றபொருட்களின் மேல் பறக்கவிட அனுமதிக்கக் கூடாது. ‘‘உண்மை’’ என்பது கர்த்தருடைய சித்தத்திற்கு அர்ப்பணித்து, அவருடைய போதனையைப் பின்பற்றி, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்திருத்தலை குறிப்பிடுகிறது.

தேவன் தம்முடைய ஜனங்கள் தம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும், அது வாரத்தின் முதல் நாளில் (அப்.20:7), கர்த்தருடைய நாளில் (வெளி.1:10), தம்முடைய ஞாயிற்றுக் கிழமையில் நடைபெற வேண்டும் என விரும்புகிறார். அவர், மேலும் தம்முடைய பிள்ளைகளுக்கு, கிறிஸ்தவர்களுக்கு, கர்த்தருடைய சபை அங்கத்தினர்களுக்கு, அவர்களுடைய ஆராதனையில் பின்வரும் காரியங்களையும் சேர்த்துக்கொள்ளும்படி அறிவுறுத்தியிருக்கிறார்.

1. கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளும்படி கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இது தேவன் தம்முடைய ஜனங்களோடு பேசுவதற்கான தேவனுடைய வழியாகும். அவர் நம்மோடு நேரடியாக தனியாக மற்றும் தம்முடைய வார்த்தைக்கு மாறாக பேசுகிறவரல்ல, ஆனால் தம்முடைய வார்த்தையின் மூலம் மட்டுமே பேசுகிறார். தேவன் நமக்கு என்னவெல்லாம் கூற விரும்பினாரோ அவையனைத்தும் வேதத்தில் எழுதப்பட்டுள்ளது இரட்சிப்பைப் பற்றி, சபையைப்பற்றி, கிறிஸ்தவவாழ்வைப்பற்றி, பரலோகத்தைப்பற்றி, மேலும் நரகத்தைப் பற்றிய அனைத்தும் வெளிப்படையாக அங்கே எழுதப்பட்டுள்ளது. ஆனபடியால் நாம் தேவனுடைய வார்த்தைகளைக் கற்றுத் தெரிந்துகொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். பவுல், நாம் தேவனுக்கு முன்பாக உத்தமராக இருக்கும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமெனக் கூறுகிறார் (2தீமோ.2:15). மீண்டும், அவன் தேவனுடைய வார்த்தை எந்த நற்கிரியையுஞ் செய்ய முழுவதும் தகுதியுள்ளவனாக்குகிறது (2தீமோ.3:16,17) எனக் கூறுகிறான். மேலும் அவன் தேவனுடைய வார்த்தையைக் கேள்விப்படுகிறதினால் விசுவாசம் வருகிறது எனவும் கூறுகிறான் (ரோம.10:17).

2. கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்படி வாரத்தின் முதல்நாள்தோறும் கூடிவர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதுவே தேவனிடத்தில் நாம் பேசுகின்ற வழியாகும். பெந்தெகொஸ்தே நாளில் 3000 பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டவர்களாக

சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்பு (அப். 2:37,38,47), அப்போஸ்தலர் 2:42 ல், "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என நாம் வாசிக்கிறோம். கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் தொடர்ந்து அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தார்கள். அவற்றின் ஒரு பகுதி ஆராதனையாயிருந்தது. ஆராதனையின் ஒரு பகுதி ஜெபங்களை உள்ளடக்கியதாயிருந்தது. ஜெபத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும் ஜெபத்தின் அவசியத்தைப் பற்றியும் பேசுகின்ற வேதாகம வசனங்கள் அநேகமுண்டு. பவுல் நாம் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டுமெனவும் (1தெச.5:17), மேலும் நம்முடைய வேண்டுதல்களை நாம் தேவனுக்குத் தெரியப்படுத்தவேண்டும் (பிலி.4:6) எனவும் சொன்னான். நாம் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறோம் (லூக்.18:1). நாம் நம்முடைய மத்தியஸ்தரும், பரிந்துபேசுகிறவருமான கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் (யோவா.14:13; 1யோவா.2:1). மேலும் நாம் அவருடைய சித்தத்தின்படி ஜெபிக்கவேண்டும் (1யோவா.5:14,15).

3. கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய பிதாவையும் அவருடைய குமாரனாகிய இயேசுவையும் பாடித்துதிக்கும்படி கர்த்தருடைய நாளில் கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறோம். பவுல், "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம்பண்ணி" (எபே.5:19) என்றான். அவன் கொலோசெயர் 3:16 லும் 1கொரிந்தியர் 14:14,15லும் இதே கூற்றையே அறிவுறுத்தி, நாம் ஆவியோடும் புரிந்துகொள்ளுதலோடும் ஜெபிக்கவேண்டும் என்றான். கர்த்தருடைய ஜனங்கள் இயந்திரங்களான வாத்தியக் கருவிகளுடன் பாடியதாக புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் நாம் எங்கும் வாசிக்கிறதில்லை. மாறாக, நாம் நம்முடைய இருதயத்தில் பாடவேண்டியவர்களாயிருக்கிறோம் என்று பவுல் கூறுகிறான். வாயின் இசை, மனித குரல்நாணங்களாகிய கருவியிலிருந்து வரும் பாட்டு உலகத்தில் மிகவும் அழகான இசையாகும். இவ்வகையான இசையே நாம் கர்த்தரை ஆராதிக்கும் போது கர்த்தர் விரும்புகிற இசையாகும்.

4. கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளிலே கர்த்தருடைய நினைவுகூருதலாகிய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறார்கள். நாம் இவ்வுலகில் இரட்சிக்கப்படவும், வரவிருக்கின்ற உலகில் நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையுடைவர்களாயிருக்கவும் இயேசு சிலுவையிலே மரித்தார். ஆனபடியால், அவர் வாரத்தின் முதல் நாள்தோறும் பலியான தம்முடைய சரீரம் மற்றும் நமக்காக சகித்துக் கொண்ட பாடுகளின் நினைவுகூருதலாக புளிப்பில்லாத அப்பத்தில் பங்கு கொள்ளும்படி தம்முடைய ஜனங்களைக் கேட்டுக்கொண்டார் (மத்.26:26). நாம் நம்முடைய பாவங்களுக்கு மன்னிப்புண்டாயிருக்கும்படி சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தின் நினைவுகூருதலாக திராட்சப்பழரச பாத்திரத்தில் பங்குகொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம் (மத்.26:27,28).

5. இறுதியாக, நாம் நம்முடைய வருமானம் மற்றும் ஆஸ்தியின் ஒரு பங்கினை செலுத்தும்படிக்கு வாரத்தின் முதல் நாளிலே கூடி வரவேண்டியவர்களாயிருக்கிறோம். பவுல் கொரிந்து சபை கிறிஸ்தவர்களுக்கு. "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மபணத்தைக்குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல்



## கண்களில் பரிசுத்தம் வேண்டும்
## கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது ...(லூக்கா 11:34)

-M.Rajamani



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துகள். தேவனால் உண்டாக்கப்பட்ட மனிதனுக்கு சரீரத்தில் மிக முக்கியமானது கண்கள். இது இல்லையென்றால் ஒரு மனிதனின் வாழ்க்கை மிகவும் பரிதாபமாக இருக்கும் உலகத்தில் இருக்கும் எல்லா மருத்துவ மனைகளிலும் கண் டாக்டர்கள் கண்களை பரிசோதித்து சுத்தப்படுத்தலாம். ஆனால் அந்தக் கண் மருத்துவர்களால் "கண்களின் இச்சையை" மட்டும் சரிபண்ணவே முடியாது. இந்த கண்களின் இச்சை என்னும் நோய் எப்பொழுது? எப்படி? எந்த நேரத்தில் வரும் என்பது யாருக்கும் தெரியாது. அப்படி தெரிந்தால் அநேக ஆத்துமாக்களை நரகத்திலிருந்து காப்பாற்றலாம். இந்த நோயிலிருந்து காப்பற்றவும் நமக்கு மிகப்பெரிய கண் ஸ்பெஷலிஸ்ட் உலகத்தில் இருக்கிறார். அவர் எல்லாருடைய கண்களையும் பரிசுத்தம் பண்ணுகிறவர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அவர் நமக்கு இலவசமாகவே கண்களின் இச்சை என்ற நோயை குணமாக்கி, பரிசுத்தம் பண்ணுகிறார். அவர்தான் நம்முடைய மீட்பரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து ஆவார். அவரால் மட்டுமே கண்களை பரிசுத்தப்படுத்தி நல்வாழ்க்கையை அமைத்துக்கொடுக்க முடியும்.

கண்களின் இச்சை என்னும் அசுத்தத்தை கொண்டுவருகிறவன் சாத்தான், பிசாசு எனப்பட்டவன். கண்களின் இச்சை என்பது விபச்சாரம்,வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், பொருளாசை, எரிச்சல், வண்கண் என்பவையாகும். இதற்கு அநேக ஜனங்கள் பலியாகி விடுகிறார்கள். இந்த வியாதி உள்ளவர்கள் இருந்தால் தேவனுடைய ராஜ்யத்தில் நிச்சயமாக பிரவேசிக்க முடியாது. நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படியாக "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது... (1தெச.4:3). என்பதை வேதம் நமக்குப்போதிக்கிறது. மேலும், "யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என்று எபி.12:14-ல் பார்க்கிறோம். நம்முடைய நடவடிக்கைகள் அனைத்திலும் பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். நாம் அதன்படி நடந்து தேவனுடைய ராஜ்யமாகிய சபைக்குள் பிரவேசிப்போமாக!

## பன்னாட்டுப் பழமொழிகள்

- அன்பையும் நட்பையும் புதுப்பித்தலில் உறவினர்போல் நடந்து கொள்ளுங்கள்.
  தொழில் விஷயத்தில் வேற்று மனிதர்கள் போல் நடந்து கொள்ளுங்கள்.
  இதுவே உண்மையான நட்பு நீடிக்க வழி - **அரேபிய பழமொழி**
- ஒரு முறை மக்கள் வாயில் அகப்பட்டுக் கொண்டால்
  எளிதில் அவர்களிடமிருந்து மீள முடியாது - **சீனப் பழமொழி**
- செயலுக்குப் பின் ஆலோசனை செய்வது
  அறுவடைக்குப்பின் மழையைப் போன்றதாகும் - **ஜெர்மன் பழமொழி**



# இயேசுவை கன்னத்தில் அறைந்தான்

ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு என்றார் (மத்.5:39). இயேசுவை பிரதான ஆசாரியர், வேதபாரகர், மூப்பர்கள் கூடி நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவா? என்று கேட்டபோது, நீர் சொன்னபடிதான் என்று இயேசுசொல்ல, இவன் தேவதூஷணம் சொல்லுகிறான் என்றனர். சிதேக்கியா பொய் தீர்க்கதரிசனம் சொன்னவர்களை விட்டுவிட்டு உண்மையை சொன்ன மிகாயாவை கன்னத்தில் அடித்ததாக 1 ராஜா.22:24-ல் சொல்லப் பட்டதுபோல உண்மையைச் சொன்ன இயேசுவை முகத்தில் துப்பி, தலையில் குட்டி, கன்னத்தில் அறைந்தார்கள் (மத்.26:67). அவர் சின்னப்பிள்ளைபோல் ஏங்கி நின்றார்.

பள்ளியில் படிக்கும்போது தமிழ் பாடப்புத்தகத்தில் சீத்தலைசாத்தனார் என்ற புலவரைப் பற்றி சொல்லப்பட்டிருந்தது. அவர் தன்னுடைய சீடர்களுக்கு அறிவை மிகத் தெளிவாக எடுத்துப் போதிப்பாராம். ஆனால் அவர் எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அந்த சீடர்கள் மனதில் பதியாதாம், அறிவில் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளார்கள் என்பதை அறிய தேர்வுவைத்தால் ஏராளமான பிழைகள் இருக்குமாம். ஒவ்வொரு பிழைக்கும் ஊசியாலே தன் தலையில் குத்திக்கொள்வாராம். தலை புண்ணாகி சீல்பிடித்து இருக்குமாம். இதனால் அவரை சீத்தலைசாத்தனார் என்று அழைப்பார்களாம். அதுபோல ஜனங்களுக்கு எத்தனை வேத அறிவைப் போதித்தாலும் கிறிஸ்துவின் அன்பை உணராதவர்கள் அவரை தலையில் குட்டக்கூடியவர்களாக இருந்திருக்கிறார்கள் -V.Paulraj

## தெரிந்து கொள்வோம்! தேவனின் பெயர்



**ELOHIM** (யேலோஹிம்) நித்திய (அழிவில்லாத) தேவன். சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகர்.

**பொருள்:** வானத்தையும் பூமியையும் படைத்த வல்லமையுள்ள தேவன். எல்லாவற்றையும் அறிந்தவர். எங்கும் எப்போதும் ஜீவிக்கிறவர். 'ஏல்' என்பதின் பன்புப்பெயர்.

**வேத குறிப்பு:** ஆதி.1:1-3; உபா.10:17; சங்.68; மாற்.13:19

**உச்சரிப்பு:** (el-o HEEM) ஏலோஹிம். சிருஷ்டிக்கப்பட்டவர்களுக்கு சிருஷ்டி கர்த்தாவுடன் உள்ள உறவாக அமையபெற்றது. ஆதி.1:26-ல் காணப்படும் "மனுஷனை உண்டாக்குவோமாக" என்றதால் படைப்பின்போது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் உடனிருந்தனர் என்பதை அறிய முடிகிறது. அதே நேரத்தில் "ஏலோஹிம்" பொய்யான (FALSE GODS) மற்றும் மனித நியாயாதிபதிகளையும் குறிக்கிறது என்பதை அறிக. சங்.82:6,7; யோவா.10:34.

- John S.Nathan



இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" (1கொரி. 16:1,2) என்றான். மேலும் அவன், "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2கொரி.16:1,2) என்றான். எனவே தேவன் எதை விரும்புகிறார்? அவர் தம்முடைய ஜனங்கள் தம்மை தொழுதுகொள்ளும்படியும்; சபைப் பணிக்கென அங்கே பணம் இருக்கும்படி நம்முடைய வருமானத்திலிருந்து ஒரு பகுதியைக் கொடுக்கும்படியும் விரும்புகிறார். நாம் எவ்வளவு கொடுக்கும்படி தேவன் விரும்புகிறார்? நாம் மனதில் நியமித்திருக்கிறபடி. அது எவ்வளவு? கண்டிப்பாக, பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் யூதர்கள் கொடுத்து வந்த பத்து சதவீதம் போல் அல்லது அதற்கும் மேல். எப்படி கொடுக்கவேண்டுமென தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்? விசனமாயல்ல, ஆனால் நாம் மனதில் நியமித்திருக்கிறபடி, நாம் விசனமாய் அல்லது நிர்பந்தமான உணர்வுகளின் அடிப்படையில் கொடுப்போமானால், நாம் தேவனைப் பிரியப்படுத்துகின்ற வழியில் கொடுக்கிறவர்களாயில்லை. காயீனுடைய காணிக்கை புறக்கணிக்கப்பட்டது ஏனென்றால் அந்த காணிக்கை தேவன் கேட்டுக் கொண்டது போலல்ல, நம்முடைய காணிக்கையும் ஆவியோடும் உண்மையோடும் கொடுக்கப்படாவிட்டால் புறக்கணிக்கப்படும்.

இப்போது நாம் ஆராதனையின் இந்த செயல்களில் எதையாவது விட்டு விட்டு தேவன் ஏற்றுக்கொள்ளுகிற வண்ணமாக ஆராதனை செய்யமுடியுமா? நிச்சயமாக ஒன்றைக் கூட நாம் தவிர்க்க முடியாது. இன்னும் சிலர் கர்த்தருடைய பந்தியில் மட்டும் பங்கு கொண்டாலே, அவர்கள் தொழுது கொண்டதாக எண்ணுகின்றனர். கர்த்தருடைய பந்தி முக்கியமானது, ஆனால் அதைப்போன்றே நம்முடைய வேதபாடம், நம்முடைய ஜெபம், நம்முடைய பாடல், நம்முடைய கொடுத்தல் போன்றவைகளும் முக்கியம். தயவுசெய்து ஒவ்வொரு கர்த்தருடைய நாளில் தொழுதுகொள்ள திட்டமிடுங்கள், தொழுகையின் ஒவ்வொரு செயலிலும் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள திட்டமிடுங்கள். இதுவே ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் நீங்கள் செய்யத்தக்க ஆராதனையாகும்.

மேலும், நீங்கள் தொழுதுகொள்ளும்போது உங்களுடைய நினைவுகளை நீங்கள் செய்து கொண்டிருக்கிறவற்றிற்கு நேராக ஒருமுகப்படுத்துங்கள். தூக்கத்திற்கு இடமளிக்காதீர்கள், ஆராதனை செய்வதிலிருந்து விடுபட்டு உங்களுடைய மதியஉணவிற்காக நீங்கள் திட்டமிட்டிருக்கிறவற்றிற்கும் மேலும் ஆயிரக்கணக்கான மற்ற காரியங்களாகிய உங்களுடைய வேலையைப் பற்றி நினைப்பதற்கும் உங்கள் மனதை அலையவிடாதீர்கள். கர்த்தருடைய ஜனங்களோடு ஆராதனையில் நீங்கள் கூடிவந்தால், நீங்கள் ஆவியோடும் உண்மையோடும் ஆராதனையில் பங்குகொள்ளுங்கள், அதன் பிறகு நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள், மற்றவர்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தர் மகிமைப்படுத்தப்படுவார். நீங்கள் உங்களுடைய குடும்பத்திற்கும், உங்களுடைய நண்பர்களுக்கும், எல்லா உறவினர்களுக்கும் நல்ல மாதிரியை ஏற்படுத்துவீர்கள். தயவு செய்து ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் தொழுதுகொள்ளுங்கள், உங்களுடைய தொழுகை வேதாகமத்தின்படியாகவும் ஆவிக்கேற்றபடியாகவும் இருக்கக்கடவது. அதன்பிறகே கர்த்தர் அவற்றை ஏற்றுக்கொள்ளுவார்.

பெண்கள் பகுதி

## தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா? -Betty

## Can Man Find the Way to God?

**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

**சிருஷ்டிப்பின் காரியங்களில் சத்தியத்தின் நூலிழைகள்**




சிருஷ்டிப்பை குறித்த பல்வேறுபட்ட இக்குறிப்புகள் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டவை அல்ல என்ற போதிலும், இக்குறிப்புகள் சிலவற்றில் கேள்விகளும், புராண கருத்துக்களும் வெளியரங்கமாக இருந்த போதிலும் ஒவ்வொரு சம்பவத்திலும் ஆணித்தரமான ஒற்றுமைகள் உள்ளன. சிருஷ்டிப்பை குறித்த உண்மை சம்பவத்தின் நிரூபணமானது சகலத்தையும் அறிந்திருக்கிற ஒரு தேவனிடமிருந்து முதல் மனுஷர்களுக்கு கையளிக்க தகப்பனிடமிருந்து புத்திரனுக்கு, தகப்பனிடமிருந்து புத்திரனுக்கு பலதலை முறைகளை கடந்து, கடைசியில் பல்வேறு பாரம் பரியங்கள் எழுத்து வடிவிலே கொடுக்கப்பட்டன.

பல்வேறு கருத்துகளிருந்த அக்காலத்தில் சிருஷ்டிப்பை குறித்த சம்பவங்கள் எழுதப்பட்டன புராண காரியங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், எவைகள் சத்தியத்தின் நூலிழைகளாக இருந்தன?

1. சிருஷ்டிகர்

2. முழுமையான இருள்

3. எவ்விடத்திலும் ஒரு பெரும் ஆழமான ஜலம்

4. தேவனுடைய வார்த்தையால் வெளிச்சம் வந்தது.

5. தேவனுடைய வார்த்தையால் ஜலங்கள் ஒன்று சேர்ந்தன ஆகையால் பூமியில் வெட்டாந்தரை தோன்றியது.

6. சகல ஜீவராசிகளும் உண்டாயிருக்கும்படி அழைக்கப்பட்டன.

7. மனுஷர்கள் சிருஷ்டிக்கப்பட்டார்கள்

இங்கும் அங்குமாக சிதறியிருக்கிற மனுஷர்கள் ஒரு சமயத்தில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இல்லாமல் காரிருள் இருந்ததையும், ஜலம் பூமியை முழுவதுமாக மூடியிருந்ததையும் எளிமையாக கற்பனை செய்து பார்த்திருக்க முடியுமா? பூமியின் வித்தியாசமான பாகங்களில் வாழ்கிற அநேக ஜனங்கள் தாவரம், பிராணி மனித ஜீவியம் ஆகியவை தேவன் கட்டளையிட்ட உடனே ஜீவனுடன் தோன்றின என்று ஒரேவிதமான முடிவுக்கு வந்திருக்க முடியுமா? இன்றைக்கு இருக்கிற பூமியையும், வானங்களையும் உற்று நோக்குவோமேயாகில், ஆதியாகமத்தில் சொல்லப்பட்டதை போன்ற ஒரு சம்பவத்தை எவர் ஒருவரும் தன்னுடைய கற்பனை சக்தியினால் உருவாக்க முடியாது!

ஆனால் ஒவ்வொரு சிருஷ்டிப்பின் சம்பவங்களையும் குறித்த மூலக்கூறுகள் அங்கே இருந்தன! பல்வேறு வகையில் ஒத்திருக்கக்கூடிய குறிப்பிட்ட ஒற்றுமைகள் வெளியரங்கமாக காணப்படுகின்றன, மீண்டும் இந்த தகவலுக்கான ஒரு மூல காரணம் அங்கே இருந்தது. அந்த மூலகாரணம் தேவனாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் தேவனை தவிர வேறு ஒருவரும் அவர் சிருஷ்டிப்பை தொடங்குவதற்கு முன்பு பூமிக்குரிய



## கிறிஸ்துவைப் பகிர்ந்து கொள்ளுதல்

## Sharing Christ -Dale Grissom



எல்லா தொழில் நுட்பங்களும், எல்லா கணிணிகளும், எல்லா தொலைக்காட்சி பெட்டிகளும், எல்லா வானொலிகளும், எல்லா காகிதங்களும் புத்தகங்களும் கருத்தரங்கங்களும் நிகழ்ச்சிகளும் தனித்தாள் ஊழியத்தின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது. இவைகளெல்லாம் உதவிகளாக இருக்க முடியும், ஆனால் எல்லாமே இழந்துபோன ஆத்துமாக்களைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவர ஒன்றோடொன்று இசைந்திருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. முகம்முகமாக தனிப்பட்ட விதத்தில் பிரசங்கிப்பதை விடுத்து இழந்துபோனவர்களைச் சந்திப்பதற்காக பல பெரிய திட்டங்கள் தீட்டப்படுகின்றன, ஆனால் நேரடியாக இருந்துகொண்டு இழந்துபோன சில எளிமையான ஆத்துமாக்களுக்கு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளும் சிலாக்கியத்தை வேறொன்றும் எடுத்துக் கொள்ளமுடியாது.

அன்பு மாபெரும் கட்டளையை எடுத்துச் செல்வதில் இப்பேர்பட்ட பெரிய பங்கு வகிக்கிறது (மத்.28:19,20; மாற்.16:15,16). தேவன் தம்முடைய குமாரனை நமக்காகக் கொடுத்த அந்த அன்பே இது (யோவா.3:16). கிறிஸ்து தம்முடைய சபையை (தம்முடைய ராஜ்யம்) ஸ்தாபிக்கும்படி தம்மை மனிதனுக்காக ஒப்புக்கொடுத்த அன்பே இது. இழந்து போனவர்களுக்கு சுவிசேஷமாகிய செய்தியை எடுத்துச் செல்ல நம்மை நெருக்கி ஏவக்கூடிய (ரோம.1:16) அந்த அன்பை நாமும் நம்முடைய இருதயங்களில் மனிதர்களின் ஆத்துமாக் களுக்காகப் பெற்றிருக்க வேண்டும்.

ஒரு வெற்றியுள்ள ஆத்தும ஆதாயம்பண்ணுகிறவனாயிருக்க ஒரு கிறிஸ்தவனுக்கு, அவன் ஒரு விசுவாசமிகுந்த கிறிஸ்தவனாகவும், தன்னுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட்டுள்ளது என்ற நிச்சமுள்ளவனாகவும் இருக்கவேண்டும். அவனுடைய இருதயம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் போதிப்பதற்கு அனல் கொண்டிருக்க வேண்டும். அவன் ஒருவனாய் கிளம்புகிறவனாகவும், (self - starter), தேவ வார்த்தையைப் பற்றிய அறிவுடையவனாகவும் இழந்துபோன ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய அர்ப்பணிக்கப்பட்டவனாகவும் இருக்கவேண்டும்.

இழந்து போனவர்களை ஆதாயம் செய்வதில் சக்திவாய்ந்தவராய் இருக்க விரும்புகிற ஒருவர் கண்டிப்பாக தன்னுடைய தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ள ஆயத்தமுள்ளவராக இருக்கவேண்டும். மாபெரும் கட்டளையை எடுத்துச் செல்ல மறுப்பதற்கும் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுப்பதற்கும் வாழ்க்கை என்பது மிகக் குறுகியதும் மதிப்புவாய்ந்ததுமாகவும் இருக்கிறது. உலகம் நம்முடைய வாசல்களுக்கு வெளியே தான் ஆரம்பிக்கிறது. இது நம்முடைய சமுதாயத்தில் நம்மைச் சூழ்ந்திருக்கிறது மேலும் ஒவ்வொருவரும் அத்தோடு தொடர்புடையவர் களாயிருக்கிறோம்.

இப்போது நம்முடைய வாழ்வைக் குறித்து தியானிப்பதற்கும் கிறிஸ்துவுக்காக ஜனங்களை சந்திப்பதற்கு நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று அறிந்து கொள்வதற்கும் இது ஒரு நல்ல தருணம். இப்போது கிறிஸ்துவுக்கு அநேகரை சம்பாதிக்க ஒரு சபதம் எடுத்துக்கொள்வதற்கு இது ஒரு நல்ல தருணம். மரணத்தின் நிழல் நம் ஒவ்வொரு வரையும் நெருங்கிக் கொண்டிருக்கிறது; ஒவ்வொரு மணித்துளியும் நியாயத்தீர்ப்பில் கர்த்தரை சந்திப்பதற்கு நாம் மிக நெருங்கிக் கொண்டிருக்கிறோம். நம்மோடுகூட யாரையாவது பரலோகத்திற்கு அழைத்துச் செல்லுவது அற்புதமாயிராதா!

தன்னுடைய குடும்பத்தாரையும் அழிவுக்குத் தப்புவித்துக்கொள்ளும்படிக்கு வேவுகாரரை நோக்கி: “நீங்கள் என் தகப்பனையும் என் தாயையும் என் சகோதரரையும், என் சகோதரிகளையும் அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் உயிரோடே வைத்து, எங்கள் ஜீவனைச் சாவுக்குத் தப்புவிக்கும்படி, எனக்கு நிச்சயமான அடையாளத்தைக் கொடுக்கவேண்டும்' (யோசு.2:13) என்று கேட்டுக்கொண்டு தன்னையும் தன் வீட்டாரையும் தப்புவித்துக் கொண்டாள். ஆம், இந்த லீதியாளுங் கூட தன் வீட்டாரோடு நித்திய அழிவுக்குத் தப்பித்துக் கொள்ளும்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாள். நாமும் பாவங்களினின்றும், வரப்போகும் நித்திய ஆக்கினையினின்றும் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும்படி தேவ நியதிகளை நிறைவேற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம்.


அடுத்ததாக, இந்த லீதியாள் தேவனுடைய ஊழியர்களாகிய பவுலையும், சீலாவையும் நோக்கி, நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று வருந்திக்கேட்டுக் கொண்டாள் (அப்.16:15) என வாசிக்கிறோம். அன்பு சகோதரியே, கர்த்தருடைய பணியைச் செய்யும் ஊழியர்களை உங்கள் இல்லங்களில் ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? அல்லது உங்களுடைய பெரிய பங்களாவிற்கு முன்பாக நாய் ஒன்றை கட்டிப்போட்டு ஒருவரும் உங்கள் இல்லத்திற்குள் பிரவேசிக்க விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? கர்த்தருடைய பணியைச் செய்கிற எளிமையான ஊழியர்கள் தேவனுடைய பார்வையில் மேன்மையானவர்கள். இவ்வுலகின் உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவரிலும் மேலானவர்கள். தேவனுக்குச் சேவை செய்கிறவர். ஆம்! சூனேம் என்ற ஊரிலிருந்த ஒரு கனம் பொருந்திய ஸ்திரீ தேவனுடைய மனுஷனாகிய எலிசாவுக்கு தன்னுடைய மெத்தையின் மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும் குத்துவிளக்கையும் வைத்து தேவனுடைய ஊழியரை தன்னுடைய வீட்டில் ஏற்றுக்கொண்டாள். அதனிமித்தம் தேவன் அவளை ஆசீர்வதித்து, பிள்ளை இல்லாதிருந்த அவளுக்குக் கர்ப்பத்தின் கனியைக் கொடுத்தார் (2இரா.4:8-17). அன்பு சகோதரியே, இயேசு சொல்கிறார்: “சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (மத்.10:42). அநேகர் தேவ ஊழியர்களைக் குறித்து தவறான எண்ணங் கொண்டவர்களாய் அவருக்குச் செலுத்த வேண்டிய கனத்தைச் செலுத்துவதில்லை ‘உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவஊழியக்காரனாயிருக்கிறான்' ரோம.13:4 என்ற வசனத்தை மறந்து போகக்கூடாது.

அன்பு சகோதரியே, லீதியாளைப் பற்றிய இந்தப் பாடத்திலே, நாம் அறியவேண்டியவை: அவள் ஐரோப்பாவில் முதலாவது கர்த்தருடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து தன் குடும்பத்தாரோடு இரட்சிக்கப்பட்டாள். அத்தேசத்தில் சுவிசேஷம் பரவ உதவினாள். அவள் தன் பாரம்பரியத்தைப் பாராமல் தேவனுடைய வசனம் கிடைத்தவுடன் தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டாள், பிறகு தாமதமில்லாமல் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து தான் மட்டுமல்லாது தன் வீட்டாரோடுங்கூட ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டாள். கடைசியாக தேவஊழியரை தன் வீட்டில் ஏற்றுக்கொண்டாள். இவளுடைய குணங்கள் இவளுக்கு விசேஷித்த மேன்மையைக் கொண்டுவருமல்லவா? நாமும் இவளைப் போல தேவனுடைய விருப்பத்தைச் செய்து விசேஷித்த மேன்மையான நித்திய ஜீவனைப் பெற தேவன் தாமே உதவி செய்வாராக!




பொருட்கள் இல்லாதிருந்த நிலையை குறித்து சாட்சி கொடுக்கவில்லை. சகலமும் தொடங்கிய உண்மை சம்வத்தை தேவன்தாமே, முதல் மனுஷனுக்கும் மனுஷிக்கும் போதித்தார். அவர்கள் அதை தங்களுடைய பிள்ளைகளுக்கும், பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் போதித்தார்கள். ஆனால் தலைமுறைகள் கடந்து சென்ற போது அநேகர் தேவனை விட்டு நதிகள், சூரியன், சந்திரன், நெருப்பு போன்ற வஸ்துக்களை வழிபட அநேகர் திரும்பினார்கள். அவர்கள் தங்களுடைய மூடநம்பிக்கைகளையும் புராண கண்டுபிடிப்புகளையும் சிருஷ்டிப்பை குறித்த சம்பவத்துடனே ஒருங்கிணைத்தார்கள். சத்தியத்தின் நூலிழைகள் இன்றைக்கும் நிலைநிற்பது போன்று எந்த ஒரு வாசகருக்கும் இவைகளும் வெளியரங்கமாயிருக்கின்றன.

வேதப்போட்டியாளர்கள்
கவனத்திற்கு
வேதஅறிவுப்போட்டி எண் 171,172–ல்
வெற்றிபெற்றவர்களுடைய பெயர்
மற்றும் விடைகளை
ஜனவரி மாத இதழில்
பாருங்கள்



## வேதாகமம் ஒரு கண்ணாடி





கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்களே உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துகள்.

வேதம் ஒரு கண்ணாடி என்று ஏன் இந்த தலைப்பை எழுதினேன் என்றால் சரீரப்பிரகாரமான நம்முடைய தோற்றத்தை காண்பிக்கும் கண்ணாடிகள் நிறைய உண்டு. அது சரீரத்தின் வெளி அழகு மற்றும் குறைகளை காண்பிக்கும். ஆனால் வேதாகமம் என்கின்ற கண்ணாடி நம்முடைய சரீரத்திலுள்ள குறைகளையும் ஆத்துமாவில் உள்ள பாவத்தையும் காண்பிக்கிறது. உள்ளான மனுஷனில் எவ்வளவு அழுக்கான பாவியாக இருக்கிறோம் என்று உணரச்செய்கிறது. ஆவிக்குரிய கண்ணாடி நம் பாவத்தை காண்பித்து அதை எப்படி சரிசெய்யவேண்டும் என்று நமக்குப் போதிக்கிறது. அந்த பரிசுத்த வேத கண்ணாடியை அநேகர் பார்ப்பது கிடையாது. ஒருவன் ஒருமறை அந்தக் கண்ணாடியைப் பார்த்தால் அவன் பரிசுத்தமாக்கப்படுவான்.

பரிசுத்த வேத கண்ணாடி ரோம.6:23 -ல் பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் அதை விட்டுவிலகுவது எப்படி என்பதையும், அப்.2:38 பாவத்தைவிட்டு மனந்திரும்ப வேண்டுமெனவும் போதிக்கிறது. மனந்திரும்பிய ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவேண்டுமெனவும் போதிக்கிறது.

ஞானஸ்நானம் பெற்றவர்களை கர்த்தர் சபையில் சேர்க்கிறார் அப்.2;47. சபையில் சேர்க்கப்பட்டவர்களை பரிசுத்தமாய் வாழவைக்கிறது வேதாகம கண்ணாடி. இந்தக் கண்ணாடி எவ்வளவு மேன்மையானது என்று பாருங்கள். ஆகையால் இந்த வேதாகம கண்ணாடியை உண்டாக்கினவர் தேவன். இது மனித குலத்திற்காக உண்டாக்கப்பட்டது. இந்த பரிசுத்த வேதாகம கண்ணாடியை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லுங்கள். ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு முகம்பார்க்கும் கண்ணாடி இருக்கும். அதைப்போல இந்த பரிசுத்தவேதாகம கண்ணாடியையும் வாங்குங்கள். - S.I.Reagan

# யார் வேதாகமத்தை வாசிக்கவேண்டும்?



## Who Should Read The Bible?

இளைஞர் ------------ எப்படிவாழ எனக் கற்றுக்கொள்ள
வயோதிபர் ------------ எப்படி மரிக்க என அறிய
படிப்பில்லாதோர் ------- ஞானத்திற்காக
படித்தவர் -------------- தாழ்மைக்காக
செல்வந்தர் ------------ கருணைக்காக
ஏழை ------------------ ஆறுதலுக்காக
பெலவீனர் ------------- பெலத்திற்காக
அகந்தையுள்ளோர் ----- எச்சரிப்புக்காக
தாழ்மையுள்ளோர் ------ உயர்த்தப்படுவதற்காக
துன்பப்படுவோர் -------- சமாதானத்திற்காக
சோர்வடைந்தோர் ------ இளைப்படைவதற்காக
சந்தேகிப்போர் ----------- நம்பிக்கைக்காக
பாவி ------------------ இரட்சிப்பிற்காக
கிறிஸ்தவன் ------------ போதிக்கப்படுவதற்காக

-TVOTI

### ஜெபியுங்கள்

- இவ்வருட கடைசி மாதத்தைக் காணசெய்த தேவனுக்கு நன்றி சொல்லி...
- புதிய வருடம் நமக்கு ஆசீர்வாதமான வருடமாக அமைய...
- புது வருட ஊழியங்களுக்காக...
- இவ்வருடத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக...
- புதிய வருடத்தில் புதிய மாணவ, மாணவிகள் World Evangelism Bible School -ல் சேர்ந்து வேதாகமத்தை முறையாக கற்றுக்கொள்ள...
- புதிய வருடத்தை காண வாஞ்சையாயிருக்கிற உலக மக்கள், புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை தெரிந்துகொள்ளவும், அவர்கள் இரட்சிக்கப்படவும்...
- கொடிய நோய்கிருமிகளிடமிருந்து ஜனங்கள் காக்கப்பட...



தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். 9443558041






### பெண்கள் பகுதி

# விசேஷித்த மேன்மை

## Special Distinction

- Glory Arjunan

ஒரீரு மாதங்களுக்கு முன்பாக விசேஷித்த மேன்மைக்குரிய சில ஸ்திரீகளைக் குறித்து பார்த்தோம். இப்போதும் கூட விசேஷித்த மேன்மைக்குரிய மற்றொரு ஸ்திரீயைக் குறித்துப் பார்ப்போம்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவ ஊழியர்களாகிய பவுல், சீலா போன்றோரை ஐரோப்பாவில் முதலாவது ஏற்றுக்கொண்டவளாகக் கருதப்பட்டவள் லீதியாள். அன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சீஷர்கள் ஒவ்வொரு தேசமாக கிறிஸ்துவின் சுவிசேஷத்தை, அதாவது அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைப் பற்றி பிரசங்கித்துக் கொண்டு வந்தார்கள். “அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்” (அப்.16:14). இந்த ஸ்திரீ முன்னமே தேவனை வணங்குகிறவளாயிருந்தாள். ஆனாலும் பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திற்ந்தருளினார் என வாசிக்கிறோம். அப்படியானால், அவள் தேவனை வணங்குகிறவளாயிருந்தாலும் தேவனுடைய சித்தம் செய்ய அறியாதவளாயிருந்தாள் என்று தான் பொருள். எப்படியெனில் கர்த்தருடைய வசனத்திற்குச் செவிசாய்த்து பின்பு அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர் என்று வசனம் 15-ல் வாசிக்கிறோம். நான் தேவனை வணங்குகிறவள், எனக்கு எல்லாமே தெரியும் என்று சொல்லி அவள் அத்தோடு நின்றுவிடவில்லை, தேவன் அவள் இருதயத்தைத் திறந்தபோது அதைக் கடினப்படுத்தாதபடி பவுல் கூறின தேவனுடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டாள். இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, நீங்கள் ஒருவேளை தேவனை வணங்குகிறவர்களாயிருக்கலாம், இருந்தபோதிலும் தேவனுடைய சித்தத்தின்படி நீங்கள் இரட்சிக்கப்பட “விசுவாசமுள்ளவனாகிய ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்” என்ற மாற்கு 16:16-ம் வசனத்திற்கேற்ப ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதையறியாத அநேகர், நாங்கள் பரம்பரை கிறிஸ்தவர்கள், நாங்கள் தேவனைத் தான் வணங்குகிறோம், எங்களுடைய மூதாதையர் எல்லாரும் சபையில் குருமார்களாகவும், உபதேசிகளாகவும் இருந்தார்கள் என்று சொல்லி தேவனுடைய சித்தம் அறியாதவர்களாகவே கடைசி வரை ஜீவித்து மரித்துப் போய்விடுகின்றனர். ஆனால், தேவனுடைய வசனம் நம்மை நியாயந்தீர்க்கிறதாக இருக்கிறது என்பதை மறந்து போகக்கூடாது.

பாருங்கள், அப்.16:14-15-ம் வசனங்களிலிருந்து இன்னும் இரண்டு பாடங்களைக் கற்றுக் கொள்ள முடிகிறது. வசனம் 15-ல் ‘அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு’ என வாசிக்கிறோம். இது பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள ஒரு ஞானமுள்ள ஸ்திரீயாகிய ராகாபை எனக்கு நினைவுப்படுத்துகிறது. இந்த ராகாப் கர்த்தருடைய வல்லமையை அறிந்திருந்தாள் (யோசுவா.2:10,11). கர்த்தருடைய மகத்துவங்களைக் கண்டு அவளுடைய இருதயம் நடுக்கம் கொண்டு கரைந்துபோனது. அவளுடைய தைரியம் அற்றுப்போனது. ‘உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்’ என்று கூறினாள். மேலும், தானும்